**பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு -2017**

---

பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2010 யூன் 03 ஆந் திகதிய அமப/10/0958/438/001 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வுத் தினமான 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 நிலவிய சொத்துக்களும் பொறுப்புகளும்

இறுதியாக நம்பிக்கைப் பொறுப்பு தயாரித்த 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம், செலவினம் என்பன தொடர்பான பொழிப்பு பின்வருமாறு,

| நிதிக்கூற்று விடயம் | பெறுமதி |
|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா** |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 1,917,763,213 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 110,694,262 |
| மொத்தச் சொத்துக்கள் | 2,028,457,475 |

**பொறுப்புகள்**

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புகள் | 5,182,315 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 85,080,000 |
| நிகர சொத்துக்கள் / பொறுப்புகள் | 1,938,195,160 |
| மொத்தப் பொறுப்புகள் | 2,028,457,475 |
| மொத்த வருமானம் | 117,718,311 |
| மொத்தச் செலவினம் | (130,446,796) |
| மிகை | (12,728,485) |

## 2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

2014 ஆகஸ்ட் 01 தொடக்கம் 05 ஆண்டு காலப்பகுதிக்கு மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியில் நாளாந்தம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கும் அதற்கென நாட்களைக் கணிப்பிட்டு அதற்கமைய கொடுப்பனவை மேற்கொள்வதற்குமென தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. 2017 மே, யூன் மாதங்களில் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான நாட்களது எண்ணிக்கை மாத்திரமே அதற்குரிய கோவையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், ரூபா 987,981 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ஏனைய மாதங்களுக்கு ரூபா 4,073,255 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், நாளாந்தம் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டனவா என்பதை அவதானித்தமை அல்லது கொடுப்பனவு தவறற்றது என்பதைப் பரிசீலிப்பதற்குப் போதிய அறிக்கைகள் நம்பிக்கைப் பொறுப்பில் இருக்கவில்லை.

## 2.4 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு அமைக்கப்படுகையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 6(அ)(1) பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் சகல சேமிப்பும் மிகையும் வேறேதாவது வழியில் முதலீடு செய்யப்பட வேண்டுமாயின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினது செயலாளரதும் திறைசேரியின் இணக்கத்துடனும் முன்கூட்டிய எழுத்துமூல அங்கீகாரம் பெறப்பட்டு சகல சேமிப்புகளும் மிகையும் திறைசேரி உண்டியல்களில் அல்லது அரசாங்கத்தின் பிணை முறிகளில் முதலீடு செய்யப்பட வேண்டுமென அறிவித்திருந்தும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 160 மில்லியன் நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அதற்கான திறைசேரியின் எழுத்துமூல அங்கீகாரம் பெறப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது எஸ்ஈசீ/1/3/1/ஜீஈஎன் இலக்கமுடைய 2011 மார்ச் 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் திட்டமிடல் உதவியாளர் மீன் சந்தைக் கட்டிடத் தொகுதியின் ஒருங்கிணைந்த உத்தியோகத்தர் (விற்பனை மேம்பாடு) ஆக நியமிக்கப்பட்டிருந்தார். தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பவற்றிற்கு இசைவாக இல்லாது நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு 2011 மார்ச் முதல் 2017 டிசெம்பர் வரையான காலப்பகுதியில் மாத்திரம் அப்பெண் உத்தியோகத்தருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மொத்தப் படியினது கூட்டுத்தொகை ரூபா 2,479,000 ஆகும்.

(இ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் அங்கத்தவரும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியை வகிப்பவருமான ஒருவருக்கு முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் அங்கத்தவராகப் பணியாற்றுவதற்குப் புறம்பாக கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கும் காசோலைகளில் இரண்டாவது கையொப்பம் இடுவதற்குமாக திறைசேரியின் அங்கீகாரமின்றி மாதாந்தம் ரூபா 12,500 படியாகக் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான தீர்மானம் 2015 மே 22 ஆந் திகதிய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புச் சபையினது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. வழங்கப்பட்ட பதிலின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது 2017 ஆம் ஆண்டின் பொருட்டும் ரூபா 150,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்தது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரியின் 10 ஆம் பிரிவு | 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 95 மில்லியன் மற்றும் ரூபா 91 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 96 மில்லியன் குத்தகை வாடகை வருமானம் என்பவற்றை நம்பிக்கைப் பொறுப்பு சம்பாதித்திருந்தபோதும் பெறுமதிசேர் வரி கொடுப்பனவுக்குப் பதிவு செய்து கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 395(ஆ)(இ) | மீளாய்வாண்டின் இறுதியில் மாதாந்தப் பெறுவனவு மற்றும் பணக் கொடுப்பனவு வெவ்வேறாகக் கணிப்பிடப்பட்டு ரூபா 13,953,214 காசேட்டில் வரவு மீதியாகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேடு கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, ஒவ்வொரு மாத இறுதியிலும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியபோதும், 2017 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 880 | நம்பிக்கைப் பொறுப்பின் பணத்தைப் பொறுப்பேற்பவர், பணத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள், களஞ்சியப் பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து பிணை வைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் வியாபாரம் எனும் வகையில் வணிக நடவடிக்கைகளை வெவ்வேறாக இணங்கண்டவாறு நம்பிக்கைப் பொறுப்பின் சக்தியையும் நலிவுகளையும் சிறந்த பகுப்பாய்வுக்குட்படுத்துவதும் வியாபாரச் சூழலில் ஏற்படும் சந்தர்ப்பங்களையும் தகைமைகளையும் சிறந்தவாறு மதிப்பாய்வு செய்து நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களை ஈடேற்றுவதற்கு உசிதமான வழிவகைகளையும் இனங்கண்டிருக்கவில்லை. மேலும், முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் ஆரம்பம் முதலாக எதிர்வரும் ஆண்டுகளையும் உள்ளடக்குமாறு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட வேண்டிய செயல்நடவடிக்கைத் திட்டத்தை நம்பிக்கைப் பொறுப்பு தயாரித்திருக்கவில்லை.

(இ) 2006 டிசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த வரவு, செலவுத் திட்டம் 2014 முதல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 செயற்பாடும் மீளாய்வும்

நம்பிக்கைப் பொறுப்பு ஆற்ற வேண்டிய கடமைகள் சம்பந்தமாக அவற்றினது பூர்த்தி செய்யப்பட்ட மட்டத்தை அளவிடுதல் மற்றும் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்வாற்கான சுட்டிக் காட்டிகள் தயாரிக்கப்படாமை என்பன காரணமாக பூர்த்தி செய்யப்பட்ட கடமைகளது பூர்த்தி செய்யப்பட்ட மட்டம் மற்றும் பெறுபேற்றினது பகுப்பாய்வு என்பவற்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூன் 03 தொடக்கம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு வேறு நிறுவனம் ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தும், நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந்தமான வர்த்தக வளாகத்தில் உள்ள வாகனப் போக்குவரத்துப் பிரிவின் வருமானச் சேகரிப்பு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் 2011 மார்ச் 07 தொடக்கம் 10 ஆண்டுகளாகத் தனியார் கம்பனி ஒன்றுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, எழுத்துமூல உடன்படிக்கையின்றி நம்பிக்கைப் பொறுப்பின் ஐஸ் துகள் உற்பத்திச் சாலையை நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பமாகிய 2011 தொடக்கம் ரூபா 3,900,000 வருடாந்தக் குத்தகைக்கு இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின்போது ஐஸ் கட்டி விற்பனைக் கம்பனி ஒன்று நிறுவனத்தின் வளாகத்தில் இருந்தபோதும், அதற்கான எழுத்துமூல உடன்படிக்கை இருக்கவில்லை. அதன் பொருட்டு ரூபா 518,000 நிலுவை மீளாய்வாண்டு இறுதி

வரை நிலவியது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டின்போது ஐஸ்கட்டி விற்பனைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், அதற்கான எழுத்துமூல உடன்படிக்கையோ அல்லது கட்டண அறவீடோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் ஏறக்குறைய 1,375 சதுர அடிக் காணி 2017 தொடக்கம் கடற்றொழில் கூட்டுத்தாபனப் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கான எழுத்துமூல உடன்படிக்கையோ கட்டண அறவீடோ இருக்கவில்லை.

(ஈ) கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சரால் 2010 மே 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவப் பொறுப்பை அமைப்பதற்கான அமைச்சரவைக் குறிப்புக்கு 2010 யூன் 03 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தின்படி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு நிறுவப்பட்டபோதும், கணக்காய்வுத் தினமான 2018 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் நியதிச் சட்ட நிறுவனமாக அதனைச் சட்டபூர்வமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மத்திய மீன் சந்தைக் கட்டிடத்தொகுதியின் உள்ளே மீன்களைக் களஞ்சியப்படுத்தல், சுகாதார விதிமுறைப்படியும் தரமாகவும் நியமங்களுக்கேற்ப அவை பேணப்படுவதைச் சான்றுறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விற்பனைக் கூட்டுத்தொகுதியினுள்ளேயும் வெளியேயும் சுற்றாடல் மற்றும் மாசடைவதைக் குறைப்பதற்கேற்றவாறு பொதுமக்கள் வந்து செல்லல் கூடியவாறான சூழல் தயாரிக்கப்படவில்லை.

(ஊ) சந்தைக் கட்டிடத்தொகுதிக்கும் அவ்வளாகத்தில் உள்ள விலங்கின உணவு உற்பத்தியகத்துக்கும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை பரிந்துரைத்தவற்றை நிறைவேற்றுவதில் நம்பிக்கைப் பொறுப்பு தாமதமாகியமையால் 2017 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் அனுமத்திப்பத்திரத்தை கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 செப்டெம்பர் 28 ஆந் திகதியளவிலும் பெற முடியாதிருந்தது.

(எ) நம்பிக்கைப் பொறுப்பினது நிர்வாகத்திற்குட்பட்ட மொத்த விற்பனைக் கூடம் தொடர்பான குத்தகை உடன்படிக்கைக்கு ஒவ்வாதவாறு குத்தகைக்குப் பெறப்பட்ட விற்பனைக் கூடம் ஒன்றையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அடகு வைப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அல்லது கைமாற்றம் செய்வதற்கோ குத்தகையாளருக்கு உரிமை கிடையாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், விற்பனையாளர்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 154 கடைகளில் 19 குத்தகையாளர்களால் 2016 முதல் 2018 ஆகஸ்ட் 13 வரையான காலப்பகுதியின்போது 19 கடைகள் வெளிநபர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவ்விற்பனைக் கூடங்களை நம்பிக்கைப் பொறுப்பு பொறுப்பேற்று மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்குப் பதிலாக ஒப்படைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு விற்பனைக் கூடத்திற்கும் ரூபா 500,000 எனும் வீதப்படி 19 கடைகளுக்கும் ரூபா 9,500,000 நம்பிக்கைப் பொறுப்பால் பெறப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருந்த கடைகளின் எண்ணிக்கை 26 ஆகும். அவற்றிலிருந்து எதுவித பணத்தையும் முகாமைத்துவப் பொறுப்பு அறவிட்டிருக்கவில்லை.

(ஏ) நம்பிக்கைப் பொறுப்பின் மாதாந்த சராசரிச் செலவினம் ரூபா 4.5 மில்லியனுக்கும் ரூபா 6 மில்லியனுக்கும் இடைப்பட்டதாகும். ஒவ்வொரு மாத முடிவிலும் காசேட்டின் பிரகாரம் ரூபா 13 மில்லிய்ன சராசரி மிகை இருந்ததுடன், மிகையான பணத்தை வேறு சாதகமான முதலீடுகளில் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு 154 மொத்த விற்பனைக் கட்டிடத் தொகுதியையும் 128 சில்லறைக் கடைகளையும் உள்ளடக்கிய கட்டிடமாகும். 2011, 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 9,625,540 செலவில் 64 விற்பனைக் கூடங்கள் மொத்த விற்பனைக் கூடங்களாக மாற்றஞ் செய்யப்பட்டிருந்தன. 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் சில்லறைப் பிரிவின் 64 கடைகளும் சில்லறைப் பிரிவின் 46 மொத்த விற்பனைக் கூடங்களும் வர்த்தகத்திற்கு வழங்கப்படாதிருந்தன.

**3.3 பதவியணியினர் நிர்வாகம்**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 43 ஆகுமஅதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் கணக்காய்வுச் சந்தர்ப்பமாகிய 2018 சனவரி 16 ஆந் திகதியளவிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பில் பணியாற்றிய 40 பதவியணியினரில் 37 பேர் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் விடுவிக்கப்பட்ட நிரந்தர ஊழியர்கள் ஆவர். மூவர் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் ஆவர். இவ்வூழியர்களது சம்பளமும் படியும் நம்பிக்கைப் பொறுப்பால் வழங்கப்பட்டிருந்தது.

(இ) நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்துவ மற்றும் கணக்காளர் பதவிக்கு நிரந்தர ஊழியர் ஒருவர் ஆட்சேர்க்கப்படவில்லை. முகாமைத்துவப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலும் கணக்காளர் பதவிக்கு அமைச்சின் கணக்காளர் ஒருவர் பதில் கடமையாற்றும் விதத்திலும் பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

**4. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி**

------------------------------------------------------------------------------

**4.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் அடைதல்**

------------------------------------------------------------------------------

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரது கடிதம் மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான ‘‘நிகழ்ச்சி நிரல்’’ என்பவற்றின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்வாண்டின் பொருட்டு பேலியகொடை மத்திய மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு தனது பணிகள் சம்பந்தமாக நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் அவ்விலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான சுட்டுகள் என்பனவற்றை இனங்கண்டிருந்தமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------------------------------------

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

-------------------------------------------------------

கணக்களி உத்தியோகத்தர்களால் 128 ஆம் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கணக்காய்வுக் கூறை அமைத்து முறைகள் மற்றும் கட்டுப்பாட்டை சக்திமிக்கதாக்கத் தேவையான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பொருட் கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடுகளும்

### 5.2.1 பொருட் கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கென அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம் விரிவான பொருட் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

(ஆ) சகல பொருட் கொள்வனவு நடவடிக்கைகளுக்கும் முன்னர் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டுமென அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 வழிகாட்டலில் அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும், ரூபா 663,564 பெறுமதியுடைய நீர் சுத்தகரிப்பு நிலையக் கொள்வனவுகளுக்கு அவ்வாறு செய்திருக்கவில்லை.

## 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட அவதானிப்புகள் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2018 ஒக்டாபர் 31 ஆந் திகதியளவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| பந்தி இலக்கம் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பந்தி 4.4(அ) | சிற்றுண்டிச் சாலைக்கென 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் பயன்படுத்தப்படாது சிற்றுண்டிச் சாலையில் இருந்தமை. |
| (ஆ) பந்தி 4.2(உ) | நம்பிக்கைப் பொறுப்பு ஆரம்பமாகி 6 ஆண்டுகள் கடந்தபோதும், பேலியகொட மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி அமைந்துள்ள 7 ஏக்கர், 3 றூட், 14.9 பேர்ச் காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை நம்பிக்கைப் பொறுப்பு மேற்கொள்ளாமை. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சினது செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக்கட்டுப்பாடு | (i) வங்கி கணக்கிணக்கம் முறையாகத் தயாரிக்கப்படாமை.<br>(ii) காசேட்டில் குறிப்பிடப்பட்ட காசோலைகள் அடியிதழ் சேர் புத்தகங்களுடன் இணங்காமை மற்றும் நிதிப் பிரமாணங்களின்படி சான்றுறுதிப்படுத்தப்படாத உறுதிச் சான்றுகள் இருப்பதும் கொடுப்பனவு செய்யப்படாமையும் |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | உள்ளகச் செவ்வை ஏற்படும் விதத்தில் பணி ஒப்படைப்பு நடைபெறாமை. |
| | | (iv) | மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கைகளில் பொருட் கணிப்புச் சபை உத்தியோகத்தர்கள் கையெழுத்திட்டிராமையும் பயன்படுத்த முடியாத பொருட்களை அறிக்கையில் குறிப்பிடாமையும். |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | சகல விற்பனைக் கூடங்களையும் குத்ததைகக்கு வழங்காமை |
| | | (ii) | விற்பனைக் கூடங்களை உப குத்தகைக்கு வழங்குவதற்கு இடமளித்தமை. |
| | | (iii) | வரி வருமானத்தைச் சரிவர அறவிட நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை | (i) | நிலையான சொத்துப் பதிவேடு, கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணிகள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு, மின்சார உபகரணங்கள் பதிவேடு, இழப்பீடு தொடர்பான பதிவேடு, பிணை வைப்புப் பதிவேடு ஆகிய பதிவேடுகளைப் பேணாமை. |
| | | (ii) | நம்பிக்கைப் பொறுப்புக் கூட்ட நடவடிக்கை அறிக்கைகளுக்கு அறிக்கைப் புத்தகங்களைப் பேணாமை. |
| | | (iii) | மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்கு, ஏடுகள், பதிவேடுகள் என்பன பூர்த்தி செய்யப்படாமை |